பட்டையைக் கிளப்பும் 'பர்ரி' பேரீச்சை…



திண்டுக்கல், முள்ளிப்பாடி பகுதியைச் சேர்ந்த அன்பழகன் தன்னுடைய தோட்டத்தில் பேரீட்சை நடவு செய்து மூன்று ஆண்டுகளில் மகசூல் எடுத்து கொண்டிருக்கிறார். அமெரிக்காவுல கம்ப்யூட்டர் இன்ஜினீயரா வேலை பார்த்துக்கிட்டிருந்தார். வேலை விஷயமா அடிக்கடி வளைகுடா நாடுகளுக்கு போவேன். அவங்க செய்துகிட்டிருக்கிற பேரீட்சை விவசாயத்தைப் பார்க்கும்போது, இதை நம்ம ஊருல செய்தா எப்படி இருக்கும்னு யோசிப்பேன். கடைசியில அதை நிறைவேத்தறதுக்காகவே, வேலையை விட்டுட்டு இந்தியாவுக்கு வந்து விவசாயம் செய்யத் தொடங்கினேன்.குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த பேரீட்சை விஞ்ஞானி, நவீன்பாய் சௌதாகர் அறிமுகம் கிடைத்தது.

அவரோட ஆலோசனைப்படி 'பர்ரி' ரக பேரீட்சையை குஜராத்துல இருந்து வாங்கிட்டு வந்து, 12 ஏக்கரில் சாகுபடி செய்தேன். இது திசு வளர்ப்பு நாத்துங்கிறதால, ஒரு நாத்தோட விலை 3,500 ரூபாய். மொத்தம் 700 நாத்துக்களை, வாங்கிட்டு வந்து நடவு செஞ்சி மூணு வருஷம் ஆயிற்று. 12 ஏக்கரில் 616 மரம் இருக்கிறது. அதுல 500 மரம் பாளை போட்டு, இந்த வருஷம் காய்ச்சிருக்கிறது.வழக்கமா, மற்ற பழங்கள் மாதிரி பேரீட்சம் பழத்தை மரத்திலிருந்து பறித்து அப்படியே சாப்பிட முடியாது. அதை உலர வைச்சு. பதப்படுத்தின பிறகுதான் சாப்பிட முடியும். ஆனால், இந்த பர்ரி வகை பேரீட்சையை மரத்திலிருந்து பறித்து அப்படியே சாப்பிடலாம். மத்த விளைபொருள்கள் மாதிரியே அறுவடை செய்து அப்படியே விக்கலாம்.

**சாகுபடி முறை**

தமிழகத்தில் மலைப் பகுதிகளைத் தவிர, மற்ற அனைத்து பகுதிகளுக்கும் ஏற்றது பர்ரி ரக பேரீட்சை. மணல் கலந்த ஆறடி ஆழத்துக்கு மண்கண்டம் உள்ள அனைத்து மண்ணிலும் இது நன்கு வளரும். வடிகால் வசதி மிக அவசியம். பாலைவனத்திலும் தண்ணீர் தேங்கி நிற்கும் குட்டைளின் கரைகளில் தான் பேரீட்சை விளையும். உப்பு தண்ணீரில் கூட நன்கு வளரும். ஆனால், தண்ணீர் வசதி இல்லாத, மானாவாரி நிலங்களில் பேரீட்சையைக் கட்டாயம் பயிரிடக்கூடாது.இந்தப் பயிருக்கு அதிக நிழல் இருக்கக்கூடாது. இதன் மட்டைகள் கீழ் நோக்கி தொங்காமல் நெராக இருக்கும். அதனால் 27 அடி அல்லது 30 அடி இடைவெளியில்தான் நாற்றுகளை நடவேண்டும். இப்படி நடும்போது ஏக்கருக்கு அதிகபட்சம் 50 நாற்றுகள் தேவைப்படும். பர்ரி ரகத்தில் திசு வளர்ப்பு நாற்றுகளும் இருக்கின்றன.

விதை மூலமாக உற்பத்தி செய்யப்படும் மரத்தில் கிடைக்கும் பழம், கொஞ்சம் துவர்ப்புத் தன்மையோடு இருப்பதால், அத்தகையப் பழங்களுக்கு குறைவான விலைதான் கிடைக்கும். அதோடு ஆண் மரம், பெண் மரங்களை நாற்றுப் பருவத்தில் கண்டுபிடிப்பதும் கஷ்டம். ஆனால், திசு வளர்ப்பு நாற்றுகளில் ஆண், பெண் நாற்று என்பது ஆரம்பத்திலேயே தெளிவாக தெரிந்துவிடும். அத்தோடு, இப்படி உருவாக்கப்படும் மரங்களில் கிடைக்கும் பழங்கள் சுவையாக இருப்பதால், அதிக விலையும் கிடைக்கும். பொதுவாக 100 பெண் மரங்களுக்கு, ஐந்து ஆண் மரங்கள் இருப்பது போல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

நாற்றைத் தேர்வு செய்யும்போது, குறைநதபட்சம் 5 இலைகள் உள்ள செழிப்பான நாற்றுகளாக பார்த்து தேர்வு செய்ய வேண்டும். தென்னை போல மூன்றடிக்கு மூன்றடி குழி எடுத்து, குழிக்கு 10 கிலோ ஊட்டமேற்றிய தொழுவுரம் போட்டு. நாற்றை நட்டு மேல்மண்ணைக் கொண்டு குழியை மூட வேண்டும். நடவு செய்த பின் இரண்டு மாதம் வரை நாற்றில் நேரடியாக வெயில் படாதவாறு, நிழல் வலை அல்லது பனை மட்டையை வைத்து நாற்றைச் சுற்றிக் கட்டிவிட வேண்டும்.முதல் ஒரு வருடம் வரை தினமும் ஒரு செடிக்கு 25 லிட்டர் தண்ணீரும், 2-ம் வருடம் 50 லிட்டர் தண்ணீரும், 3-ம் வருடம் 100 லிட்டர் தண்ணீரும் கொடுக்க வேண்டும். 10 வயதுக்கு பிறகு, ஒரு மரத்துக்கு தினமும் 300 லிட்டர் தண்ணீர் கொடுக்க வேண்டும். பேரீட்சையை பொறுத்தவரை சொட்டுநீர் பாசனம்தான் சிறந்தது.தண்ணீர் கொடுக்காவிட்டாலும் இந்த மரம் உயிரோடு இருக்கும்.

ஆனால், மகசூல் கிடைக்காது. இந்த ரக மரங்கள், அதிகபட்சமாக 54 டிகிரி செல்சியஸ், குறைந்தபட்சம் மைனஸ் 7 டிகிரி செல்சியஸ் வரைக்கும் தாங்கும் திறன் உடையவை. குறிப்பாக, 34 முதல் 40 டிகிரி வரை வெப்பநிலை உள்ள இடங்களில் அருமையாக வளரும். நடவு செய்த இரண்டரை ஆண்டுகளில் அல்லது மூன்றாவது ஆண்டு தொடக்கத்தில் பூ எடுக்கும். பேரீட்சையில் ஆண் மரம் ஜனவரி மாதம் தொடங்கி, பிப்ரவரி வரை பூக்கும். பெண் மரம் பிப்ரவரி இறுதியிலிருந்து ஏப்ரல் வரை பூக்கும்.இந்தக் கால நிலை மாறுபாட்டால் இயற்கையாக மகரந்தச் சேர்க்கை நடைபெறுவதில் சிக்கல்கள் ஏற்படும். இது மகசூலை பாதிக்கும். அதனால், ஆண்பூக்கள் பூக்கும் போது, பாளை வெடித்தவுடன் பூவை வெட்டி, அதிலுள்ள மஞ்சள் நிற மகரந்தத்தூளை உதிர்த்து ஒரு பாட்டிலில் சேகரித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

இது நமது அறை வெப்பநிலையில் நான்கு மாதம் வரை கெடாமல் இருக்கும். குளிர்சாதனப் பெட்டியில் உள்ள “ஃப்ரீசரில்” வைத்தால் ஒரு வருடம் வரை கெடாமல் இருக்கும். பெண் மரங்களில் பாளை வெடித்தலிருந்து இரண்டு முதல் நான்கு நாட்கள் வரை மகரந்தச் சேர்க்கைக்கு உகந்த நேரம். சேமித்து வைத்திருக்கும் ஆண் மகரந்தத் தூளை இந்த நேரத்தில் பெண் மரங்களின் பாளையில் சேர்க்க வேண்டும். அதாவது, ஒரு மடங்கு ஆண் மகரந்தத் தூள், 20 மடங்கு மைதா மாவு இரண்டையும் கலந்து கொள்ள வேண்டும். இதை நீளமான குழாய் பொருத்தப்பட்ட டப்பாவில் கொட்டி, பெண் பூவில் தெளித்துவிட வேண்டும். இப்படி மகரந்தச் சேர்க்கை செய்தால்தான் அனைத்து பூவும் பிஞ்சாக மாறும். இதன் குலை தென்னை மாதிரி கிழ் நோக்கி வராமல், மேல் நோக்கி போகும். அதனால, பூ எடுத்த ஒரு மாதத்தில் குலையை மட்டையோடு சேர்த்து வளைத்துக் கட்டி விடவேண்டும்.

**அறுவடை** குலையின் நுனிப்பகுதியில் உள்ள கிளைகள் மிகவும் மெல்லியதாக இருக்கும். காய் பிடித்தவுடன் பாரம் தாங்காமல் அவை ஒடிந்து விழுந்து விடும். அதனால் முன்னெச்சரிக்கையாக நுனியில் 6 செ.மீ. தூரத்துக்கு வெட்டி விடவேண்டும். அதே போல குலையில் உள்ள கிளைகள் அதிக நெருக்கத்துடன்

இல்லாமல், பரவலாக இருப்பது போல் கலைத்து விட்டால்.. காய்கள் பெருத்து, அதிக மகசூல் கிடைக்கும். போதுமான இடைவெளி இருந்தால் ஒவ்வொரு பழமும் 10 முதல் 15 கிராம் வரை எடை இருக்கும். சிறிய மரங்களில் ஒரு மரத்துக்கு அதிகபட்சமாக 10 பாளைகள் கிடைக்கும். காய்கள் ஓரளவு திரட்சியாக வந்தவுடன், பிளாஸ்டிக் பையைக் கொண்டு கலையை மூடி பாதுகாக்க வேண்டும். குலையிலுள்ள அனைத்து காய்களும் மஞ்சள் நிறத்துக்கு மாறி, ஓரிரு காய்கள் கனிந்த நிலைதான் அறுவடை நேரத்துக்கான அறிகுறி. பெரிய மரங்களில் அதிகபட்சம் 30 பாளைகள் வரை வெடிக்கும்.பூ எடுத்தத்திலிருந்து 5 முதல் 6 மாதத்தில் குலையை அறுவடை செய்யலாம்.

மூன்றாவது வருடத்தில் ஒரு மரத்தில் 25 முதல் 30 கிலோ மகசூல் கிடைக்கும். நான்காவது வருடத்தில் 50 முதல் 60 கிலோவும், ஐந்தாவது வருடத்தில் 80 முதல் 100 கிலோ வரையும் கிடைக்கும். அதற்கடுத்த ஆண்டுகளில் மகசூல் அதிகரித்துக் கொண்டே போகும். ஒரு மரத்தின் வயது குறைந்தபட்சம் 65. அதன் 45-ம் வயதில் மகசூல் கொஞ்சம் கொஞ்சமாக குறைய ஆரம்பிக்கும்.முதல் வருடம் ஒவ்வொரு செடிக்கும் 50 கிராம் நைட்ரஜன், 50 கிராம் பாஸ்பரஸ், 50 கிராம் பொட்டாசியம் சத்துக்களை ஆறு மாதத்துக்கு ஒருமுறைக் கொடுக்க வேண்டும். தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் இந்த அளவில் 100 கிராமை அதிகரித்துக் கொண்டே போக வேண்டும். 10-ம் வருடம் ஒவ்வொரு மரத்துக்கும் ஒரு கிலோ அளவில் மேலே உள்ள சத்துக்களைக் கொடுக்க வேண்டும். அதே போல முதல் வருடத்தில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை செடிக்கு 5கிலோ தொழுவுரமும், 3-ம் வருடம் ஆற மாதத்திக்கு ஒரு முறை செடிக்கு 10 கிலோ தொழுவுரமும் கொடுக்க வேண்டும். அறுவடை முடிந்த பிறகும் ஒவ்வொரு மரத்துக்கும் 5 கிலோ தொழுவுரம் இட வேண்டும்.மரத்திலிருந்து பச்சை மட்டைகளை வெட்டக் கூடாது.

கடைசி மட்டை நுனிப்பகுதியிலிருந்து கொஞ்சம் கொஞ்சமா காய்ந்து கொண்டே வரும். அப்படி காய்ந்த மட்டைகளை, மரத்தை ஒட்டி வெட்டாமல், ஒரு அடி தள்ளி வெட்டி எடுக்க வெண்டும். மரத்தில் கூர்மையான ஆணிணைப் போன்ற முட்கள் அதிகமா இருக்கும். இதனால் பழங்கள் அதிகம் திருடு போகாது. பர்ரி ரகத்தில் அதன் ஆயுளில் 18-க்கும் மேற்பட்ட பக்கக் கன்றுகள் கிடைக்கும். இந்தக் கன்றுகள் முளைத்ததிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, தனியே பிரித்து நடவு செய்து கொள்ளலாம்.

பயிர் பாதுகாப்பு

தென்னைக்கு வரும் அனைத்து நோய்களும் பேரீட்சையையும் தாக்கும். காண்டாமிருக வண்டு மற்றும் சிகப்பு கூன்வண்டு தாக்குதல் அதிகம் இருக்கும். காண்டாமிருக வண்டு தாக்கிய மரத்தில் குருத்து வெளியே தள்ளி இருக்கும். அந்த இடத்தில் கம்பியால் குத்தி வண்டை வெளியே எடுத்துப் போட வேண்டும். பின் உள்ளே மருந்தை வைத்து ஓட்டையை சிமெண்ட் வைத்து மூடவேண்டும்.சிகப்பு கூன்வண்டு தாக்கிய மரத்தின் அருகில் போனாலே ஒரு வித வாசனை வரும். அதை வைத்தே வண்டு உள்ளே இருப்பதைத் தெரிந்து கொள்ளலாம். மரத்தின் அடியில் மட்டை வெளியே தள்ளி இருக்கும். அந்த மட்டையைக் கையால் இழுத்தாலே கையோடு வந்து விடும். உள்ளே போன வண்டு நூற்றுக்கணக்கான முட்டைகளை வைத்து விடும். இதை வளர விட்டால் மரத்தைக் காப்பாற்ற முடியாது. அதனால் பாதிக்கப்பட்ட இடத்தில் மட்டையை எடுத்துவிட்டு, வண்டு, புழு எல்லாவற்றையும் முடிந்த அளவு வெளியே எடுத்துவிட்டு ஊசி மூலம் மருந்தை உள்ளே செலுத்தலாம்.

15 நாட்களுக்கு ஒரு முறை வேரில் மருந்தை செலுத்துவதன் மூலமும் இதைக் கட்டுப்படுத்தலாம். இதையெல்லாம் விட மரத்தைச் சுற்றி வேப்பம் பிண்ணாக்கைப் போட்டு வைத்தும், ஆங்காங்கே கவர்ச்சிப் பொறிகளைத் தொங்க விட்டும் சிவப்பு கூன்வண்டுகளைக் கட்டுப்படுத்தலாம். பராமரிப்பு மட்டும் சரியா இருந்தால் ஒரு ஏக்கரில் 5-ம் வருடத்தில் இருந்து நல்ல வருவாய் கிடைக்கும். எட்டு முதல் பத்து லட்ச ரூபாய் வரைக்கும் வருடம்தோறும் வருமானம் பார்க்கலாம்.பர்ரி பேரீட்சையைப் பொறுத்தவரை ஆரம்பகட்ட செலவு ஏக்கருக்கு 3 முதல் 5 லட்சம் வரை ஆகும்.

ஆனா, மூணாவது வருடத்தில் இருந்து முதல் அறுவடையிலயே இந்தப் பணத்தை எடுத்துடலாம். பிறகு, பராமரிப்பு மட்டும் செய்துட்டு இருந்தாலே போதும். வேறெந்த வெள்ளாமையிலும் இந்த வருமானத்தைப் பார்க்க முடியாது. இந்த ரக நாத்து குஜராத்துல இருக்கற தனியார் ஆய்வுக் கூடங்கள்ல கிடைக்கிறது. பேரீட்சையைப் பொறுத்தவரைக்கும் ரசாயன உரமெல்லாம் தேவையில்லை. இருந்தாலும், முதல் தடவையா இதைப் பயிர் செய்வதால் 75% இயற்கை, 25% செயற்கைனு கலந்துதான் செய்திருக்கேன். இன்னும் இரண்டு வருஷத்துல இதை முழுமையான இயற்கை விவசாயப் பண்ணையா செய்வேன்.